No.63/ DSTE/EA/SCI-II/2010/
புதுச்சேரி அரசு
அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை
3-வது மாடி, வீட்டு வசதி வாரிய வளாகம், அண்ணா நகர், புதுச்சேரி -5.

* * *

## சுற்றுச்சூழல் விருது - அறிவிப்பு

புதுச்சேரி அரசு இந்த ஆண்டு ஆகஸ்டு 15-ம் நாள் சுதந்திர தின விழாவின் போது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சுற்றுச்சூழலை பேணுவதிலும், அது தொடர்பான பணிகளிலும், குறிப்பிடத்தக்க அளவு பணியாற்றிய பொதுமக்கள்/ நிறுவனங்கள்/தன்னார்வ அமைப்புகள் ஆகிய ஒன்றிற்கு 'சுற்றுச்சூழல் விருது' ஒன்றினை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2007 லிருந்து 2009 வரையுள்ள ஆண்டுகளில் சுற்றுச்சூழல் பற்றிய பணிகளில் சிறப்புறப் பணியாற்றிய பொதுமக்கள்/நிறுவனங்கள்/தன்னார்வ அமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து தகுதியான ஒன்றினை தேர்வு செய்ய முன்மொழிவுகள், பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான தகுதிகள் பற்றிய குறிப்புரை மற்றும் விண்ணப்பப்படிவம் ஆகியவற்றை இத்துறையின் அலுவலகத்திலிருந்து அல்லது இத்துறையின் காரைக்கால் மண்டல அலுவலகத்திலிருந்து நேரிலோ/ தபால் மூலமாகவோ இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது www.dste.puducherry.gov.in மற்றும் www.pon.nic.in என்ற இணையதளத்திலிருந்து நகல் எடுத்துக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இத்துறைக்கு 21.06.2010 அன்று மாலை 5.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறுமாறு அனுப்புதல் வேண்டும்.

இயக்குநர்
அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை

**புதுச்சேரி அரசு**
**அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை**

ஆகஸ்டு 15-ம் நாள் சுதந்திர தின விழாவின்போது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சுற்றுச்சூழலை பேணுவதிலும், அது தொடர்பான பணிகளிலும் குறிப்பிடத்தக்க அளவு பணியாற்றிய பொதுமக்கள்/நிறுவனங்கள்/தன்னார்வ அமைப்புகள் ஆகிய ஒன்றிற்கு 'சுற்றுச்சூழல் விருது' ஒன்றினை அளிக்க முடிவு செய்திருக்கிறது. 2007-2009 ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் விருது பெறுவோரை தேர்வு செய்வதற்காக பொதுமக்கள்/ நிறுவனங்கள்/தன்னார்வ அமைப்புகள ஆகியவற்றிடமிருந்து முன்மொழிவுகள், பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன.

**தகுதி:**

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் மேம்படுவதிலும் குறிப்பிடத்தக்க சாதனை படைத்த, தகுதியுள்ள பொதுமக்கள்/நிறுவனங்கள்/தன்னார்வ அமைப்புகள் ஆகியவற்றிற்கு இவ் விருதினை பெறும் தகுதி உண்டு. வயதுவரம்பு ஏதுமில்லை. பின்வரும் பட்டியல், அப்பணிக்குரிய களங்களை எடுத்துக்காட்டுவதாகும். இந்தப்பட்டியல் முழுமையானதன்று.

அ) மாசு அடைதலைக் கட்டுப்படுத்துதல்

ஆ) இயற்கை வளங்கள், புராதனச்சின்னங்கள் ஆகியவற்றை பாதுகாத்தல் மற்றும் பேணுதல்

இ) சுற்றுச்சூழல் கல்வி

ஈ) பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் சிக்கல்களைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

உ) காடு வளர்த்தல், நிலம் பண்படுத்துதல் போன்றவற்றில் தலைசிறந்த களப்பணியாற்றி இருத்தல்.

**விருதுக்குரிய அடிப்படை:**

சுற்றுச்சூழல் விருதுக்கு உரியவர் தேர்வானது சுற்றுச்சூழல் களப்பணியாற்றியவரின் பணித்தகுதிகள், அவர்தம் பணிகளின் இயல்பு ஆகியவை சிறப்பாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். ஏற்கனவே செய்த பணியில் முக்கியத்துவம், சுற்றுச்சூழல் களத்தில் அதன் செல்வாக்கும் தேர்வுக்கு சிறப்பான அடிப்படையாகக் கொள்ளப்படும்.

மேற்கூறிய அடிப்படைகளை உடைய பொதுமக்கள்/நிறுவனங்கள்/தன்னார்வ அமைபப்புகள கீழே கேட்கப்பட்டுள்ள முழு விபரங்களை உரிய படிவத்தில் குறிப்பிட்டு தங்கள் விண்ணப்பங்களை (3 பிரதிகள்) இயக்குநர், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, 3-வது மாடி, வீட்டு வசதி வாரிய வளாகம், அண்ணா நகர், புதுச்சேரி – 605 005 என்ற முகவரிக்கு 21.06.2010 அன்று மாலை 5.00 மணிக்கு முன்னதாக வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் விளக்கக் குறிப்புகளுடன் கூடிய விண்ணப்பதாரரின் விண்ணப்பம் 3 பிரதிகள் எடுத்து அனுப்புதல் வேண்டும். இது விண்ணப்பதாரரின் அடையாளத்தையும், அவரால் நிறைவேற்றப்பட்ட பணியையும், தேவையான சான்றுகளையும் கொண்டதாக இருக்க வேண்டும்.

இயக்குநர்
அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை

விண்ணப்பப்படிவம்

1. பொதுமக்கள்/நிறுவனங்கள்/தன்னார்வ அமைப்புகள் பெயரும், முகவரியும்
2. 2007-2009 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளின் வகை.
3. அமைப்பு / நபர், சாதிச்சங்கங்களுடன் தொடர்பு கொண்டவரா அல்லது ஏதாவது ஒரு அரசியல் கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபடுபவரா?
4. குடியுரிமை (தனிப்பட்டவராயிருந்தால்)
5. பதிவெண்ணும், தேதியும் (நிறுவனமாக இருந்தால்)
6. நிறுவன / அமைப்பில் பொறுப்பாளரின் பெயர், இடம், எய்திய இலக்குகள், பணிக்காலம்.
7. பணியேற்பின் இயல்பும், விளைவுகளின் தன்மை, அளவுகள் பற்றிய மதிப்பீடு
8. சுற்றுச்சூழலை மேம்படுத்துதல், பாதுகாத்தல்களில் செய்த பங்கு பணிகள் (குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகள், சான்றுகள்)
9. இது தொடர்பான உபயோகமான இன்னும் பிற தகவல்கள்.

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள், என் அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்று உறுதி செய்கிறேன்.

ஒப்பம்

GOVERNMENT OF PUDUCHERRY
DEPARTMENT OF SCIENCE, TECHNOLOGY & ENVIRONMENT

# NOTICE

Department of Science, Technology & Environment, Puducherry has instituted "Environment Award" of Rs.25,000/- cash and citation to be given on the Independence Day 15th August 2010 to anyone from amongst the public /institutions/voluntary organizations who/which has contributed substantially to the cause of improvement of environment and matters connected with it for the years 2007-2009 in the Union Territory of Puducherry. Proposals / Recommendations from the public/institutions/ voluntary organizations are invited for selecting the winner of the Award for the years 2007-2009.

**Eligibility**:

The prize is open to anyone from amongst the public/institutions/voluntary organizations displaying outstanding merit, achieving particularly effective results in the conservation and improvement of Environment. The term Environment will be interpreted in the broadest sense possible. The following is an illustrative list of areas of work. This list is not exhaustive.

1. Control of Pollution.
2. Protection & Conservation of Natural Resources.
3. Innovative cleaner technology if any implemented
4. Energy Conservation
5. Development of green belt, etc.

**Criteria for Award**:

The public/institutions/voluntary organizations that fulfill the above criteria may send their nomination (Three Copies) with full particulars in the prescribed form given below, so as to reach the Director, Department of Science, Technology & Environment, Puducherry on or before 21.06.2010.

The application should be accompanied by an explanatory note in three copies covering not more than five standard pages. This note should indicate the identity of the candidate and the work accomplished may be supplemented by the requisite documents.

Director

**Environment Award Application**

1. Name & Address of the public/institutions/voluntary organizations.
2. Type of activities carried out during the years 2007-09
3. Whether the public/institutions/voluntary organizations has any affiliation or function for the furtherance of the interests of any political party.
4. The Nationality of the individual.(in case the applicant is an individual)
5. Registration number and date (if the application is from organization)
6. Length of Service and the goals pursued.
7. Information regarding the nature of the undertaking and a qualitative & quantitative assessment of results.
8. The contributions made towards promotion or improvement and protection of Environment (Support with evidence and specific instances).
9. Any other information, which is considered relevance in this regard.

I certify that the information furnished above is true to the best of my knowledge and belief.

Signature